செ.வெ.எண்.378/2021 நாள்.08.09.2021

**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 12.09.2021 அன்று நடைபெற உள்ள நீட் தேர்வு முன் ஏற்பாட்டு பணிகள் குறித்த கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 12.09.2021 அன்று நடைபெற உள்ள நீட் தேர்வு முன் ஏற்பாட்டு பணிகள் குறித்த கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் மாவட்டத்தில் வருகின்ற 12.09.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று நீட் தேர்வு நடைபெற உள்ளது. நமது மாவட்டத்தில் மருதர் கேசரி ஜெயின் கல்லூரி வாணியம்பாடி மற்றும் டான் பாஸ்கோ கல்லூரி ஏலகிரி ஆகிய இரண்டு கல்லூரிகளில் நீட் தேர்வு நடைபெற உள்ளது. தேர்வு நடைபெறும் மையங்களில் உலோகம் கண்டுபிடிக்கும் கருவி அமைந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு பணியில் 5 ஆண் காவலர்கள் மற்றும் 2 பெண் காவலர்கள் மற்றும் ஒரு உதவி ஆய்வாளர் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தபட வேண்டும். மேலும் தேர்வு மையங்களுக்கு தேர்வு எழுத செல்லும் மாணவ மாணவியர்களுக்கு திருப்பத்தூர் மாவட்டத்தில் இருந்து பதினைந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்வும், தேர்வு நடைபெறும் மையங்களில் காலை 11 மணி முதல் 5 மணி வரை மின்தடை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தேர்வு நடைபெறும் மையங்களில் 5 நபர்கள் கொண்ட குழுக்கள் அமைக்க வேண்டும் என்வும், தேர்வு நடைபெறும் மையங்களில் அடிப்படை வசதிகள் அமைத்துத் தரவேண்டும் என்வும், தேர்வு மைய நுழைவாயில் கபசுர குடிநீர், கிருமிநாசினி, முககவசம் வைத்திருக்க வேண்டும், மேலும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழக வழிமுறைகளை பின்பற்றி தேர்வு நடைபெறும் மையங்களில் தேர்வு நடத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்சிஈ.தங்கையாபாண்டியன், திருப்பத்தூர் சார் ஆட்சியர் மரு.பி.அலர்மேல்மங்கை.இ.ஆ.ப, மகளிர் திட்ட அலுவலர் திருமதி.எஸ்.உமாமகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) (பொறுப்பு) திரு.விஜயன், துணை இயக்குநர் பொதுசுகாதாரம் திரு.செந்தில், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**